**உங்களிற்குத் தெரியுமா! ஆதாவது....?**

- கருப்பைப் புற்று நோயை எவ்வளவு தாமதமில்லாது கண்டுபிடிக்க முடியுமோ அவ்வளவிற்கு விரைவாக குணமாக்கும் சந்தர்ப்பங்கள் உண்டு.

- பெண்களின் மகப் பேறு உறுப்புகளில் ஏற்படக் கூடிய பல விதமான புற்று நோய்களை தொடர்ந்து வருடாந்தமோ அல்லது 3 வருடங்களிற்கு ஒரு முறையோ, மகப்பேறு வைத்திய பரிசோதனை செய்து கொள்வதன் மூலம் தாமதமில்லாது கண்டு கொள்ளலாம்.

- **கர்ப்பக் குழாய்ப் புற்றை**, ( Uterine Canal Cancer ) மகப்பேறு வைத்தியரின் பரிசோதனை மூலம் அறிந்து கொள்ளலாம்.

- **கர்ப்பப்பைப் புற்றைக்** ( Ovarian Cancer ) கண்டறிதல் கீழ்க்காணும் காரணங்களால் கடினமானதாக இருக்காலம்.

- ஆரம்பத்தில் எதுவித அறிகுறியுமில்லாது பரவிக் கொண்டிருத்தல்.

- நோய் தீவிரமடைந்த நிலையிலும், சாதாரண நோய்களின் அறிகுறிகளை மட்டுமே காட்டுதல்

- நோயின் அறிகுறி எதையுமே காட்டாத சில பெண்களிற்கு நம்பிக்கையான பரி சோதனைகள் இல்லை என்றே கூறலாம்.

இத்தகைய காரணங்களிற்காக ஒரு மகப்பேறு வைத்தியரின் சரியான கண்காணிப்பு அவசியமாகும்.

இப்பிரசுரத்தில் கர்பபக் குழாய்ப் புற்று கர்ப்பப் பைப் புற்று நோய்கள் சம்பந்தமான சகல விபரங்களையும் நீங்கள் காணலாம்.

## கர்ப்ப குழாய்ப் புற்று?

**கர்ப்பக் குழாய்ப் புற்று என்றால் என்ன?**

இப்புற்று நோயானது, பெண் குறியையும், கர்ப்பப்பையையும் இணைக்கும் கழுத்துப் பகுதியில் உள்ள உயிரணுவிலிருந்து ஆரம்பிக்கின்றது.

**ஏதனால் இது உண்டாகின்றது?**

கர்ப்பக் குழாயில் உண்டாகும் புற்று நோயின் காரணங்கள் அனைத்தும் எமக்குச் சரியாகத் தெரியாது ஆனாலும், உடல் உறவினால் ஏற்படக்கூடிய H.P.V என்ற காரணமாக கர்ப்பப்பைப் பாதையிலுள்ள உயிர் அணுவில் ஏற்படக் கூடிய மாற்றங்கள் காரணமாக சில பெண்களிற்கு புற்று நோய் ஏற்படக் கூடும்.

H.P.V என்பது பாலுறவின் போது ஏற்பட்டு வெகு விரைவில் பரவக்கூடிய ஒரு தொற்று நோய் கருத்தடை உறைப்பாவனை H.P.V தொற்று நோயைப் பெரிதும் கட்டுப்படுத்தக்கூடும் ஆனாலும் இத் தொற்று நோய்க் கிருமிகள், தோல் மூலம் பரவும் காரணத்தால் கர்பத்தடைச் சாதனங்களும், சரியான பாதுகாப்பைத் தருமென்று கூறமுடியாது. தற்போது ஒன்பதிற்கும் (9) இருபத்தி ஆறு வயதிற்கும் (26) உட்பட்ட பெண்களிற்கு இலவச H.P.V எதிர்ப்பு ஊசி போடும் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டு உள்ளது. இது பற்றிய மேலதிக விபரங்களை உங்கள் குடும்ப வைத்தியர் மூலமோ அல்லது உங்கள் உள்ளூர் C L S C மூலமோ தெரிந்து கொள்ளலாம்.

**கர்ப்பக் குழாய்ப் புற்றின் பொதுவான அறிகுறிகள் யாவை?**

ஆரம்ப காலங்களில் கர்ப்பக் குழாய் புற்று அறிகுறிகள் எதையும் கொண்டிராதிருக்கலாம் ஆனால் புற்று நோய் தீவிரமடையும் போது கீழ்க்காணும் அறிகுறிகளைக் கொண்டிருக்கலாம்.

- மாதவிடயிற்கு இடைப்பட்ட காலங்களின் போது கூடுதலான இரத்தப் பெருக்கு.
- உடலுறவின் பின், பெண்குறியில் இரத்தப் பெருக்கு.
- இடுப்பு எலும்புக் கூட்டில் நோவு.
- உடலுறவின்போது வேதனை.
- வயது வந்து மாதவிடாய் நின்றதன் பின் ஏற்படும் இரத்தப் பெருக்கு ஆகியவையாகும்.

இந்த அறிகுறிகள் இருப்பதால் நிச்சயம் கர்ப்பப் புற்று உண்டென்று கூறிவிடவும் முடியாது வேறு பல விதமான புற்று நோய்கள் போல் மேலதிக வைத்திய பரிசோதனை மட்டுமே கர்ப்பப்புற்று உண்டோ இல்லையோ என்பதை நிச்சயப்படுத்தும்.

**கர்ப்பக் குழாய்ப் புற்றை அறிதல்**

ஒரு வைத்தியரின் குறிப்பாக கர்ப்பிணிப் பெண்களுக்கான வைத்தியரின் தீவிர பரிசோதனையின்போதே ( PAP TEST ) கர்ப்பக் குழாயில் புற்று நோய் உண்டாக்கக் கூடிய தேவையற்ற உயிரணுக்கள் உண்டா இல்லையா என்பதை தீர்மானிக்கமுடியும். இப்பரிசோதனை வேதனை உடையதொன்றல்ல். கர்ப்பப்பைக் குழாயலில் சில தேவையற்ற உயிரணுக்களை அகற்றுவது மட்டுமே. ஆகவே காலதாமதமில்லாத கண்டு பிடிப்பானது உறுதியானதும் விரைவானதுமான புற்று நோய்த் தடுப்பு சிகிச்சையை ஆரம்பிக்க உதவும்.

## கருப்பைப் புற்று

**கருப்பைப் புற்று என்றால் என்ன?**

கருப்பைப் புற்று என்பது, கரு முட்டைகளை உற்பத்தி செய்யும் கருப்பையில் ஏற்படும் புற்று நோய்

**கருப்பப் பையில் ஏற்படும் புற்று நோயைக் கண்டு பிடித்தல்**

கா்ப்பக் குழாய்ப் பரிசோதனை, கருப்பப்பைப் புற்றைக் கண்டுபிடிக்கக் கூடிய சிறந்த பரிசோதனை அல்ல. நீங்கள் உங்கள் வைத்தியரிடம் செல்லும் போது சாதகமான முரண்பாடுகளை அறியும் பொருட்டு அவா் உங்கள் **“ பெல்விஸ்”** எனப்படும் இடுப்பு எலும்புக் கூட்டுப் பகுதியைப் பரிசோதிப்பார். தேவை ஏற்படின் **“ அலராசவுன்ட்”** எனப்படும் வேறு பரிசோதனைகளோடு இரத்தப் பரிசோதனைக்கும் அனுப்பக் கூடும்.

**ஒருவா் மகப்பேறு வைத்தியரின் பரிசோதனையை எப்படி பெற முடியும்?**

அனேக பெண்களிற்கு குடும்ப வைத்தியரோ, மகப்பேறு வைத்தியரோ இல்லாது இருக்கலாம். ஆனால் நீங்கள் மகப்பேறு வைத்திய பரிசோதனை ஒன்றை வெளிக்கள வைத்திய நிலையங்கள் மூலம் பெற்றுக் கொள்ளலாம் இத்தகைய பரிசோதனைகளை செய்யலாமா என்பதை முன் கூட்டியே அவா்களிடம் உறுதி செய்து கொள்ள வேண்டும். வழமைக்கு மாறாகக் கூடுதல் உதிரப்போக்கு இருந்தால் உடனடியாக வெளிக்கள சிகிச்சை நிலையத்துற்கோ அல்லது 8-1-1 என்ற தொலைபேசியுடனோ தொடா்பு கொள்ளுங்கள்.

ஒரு பெண் வைத்தியரைக்காண விரும்பின் நீங்கள் உங்கள் விருப்பத்தை வைத்திய நியமனம் எடுக்கும்போதே கூறிவிடல் வேண்டும்.

ஆங்கிலத்திலோ, பிரெஞ்சு மொழியிலோ உரையாட முடியாதிருப்பின் மொழி பெயா்ப்பாளா் ஒருவரை அழைத்துச் செல்லத் தவறாதீா்கள். இல்லையேல் நியமனம் எடுக்கும்போதே ஒரு மொழி பெயா்ப்பாளரின் தேவையையும் கூறிக் கொள்ளலாம்.

கா்ப்பக் குழாய், கா்ப்பப் பை, மாா்பகப் புற்று ஆகியவை சம்பந்தமான கூடியயளவு விபரங்களிற்கும் இப் பிரசுரத்தில் தரப்பட்டுள்ளன. ஆனால் இது முழுமையானது அல்ல.

**இதன் காரணங்கள் யாவை?**

இதன் சரியான காரணம் தெரியவில்லை அனேகமான கருப்பப்பைப் புற்று நோய்கள், குடும்பப்பின்னணி எதுவுமே இல்லாது மேலெழுந்தவாரியாக ஏற்படுகின்றது. மூா்பகப் புற்று நோய் உள்ள பெண்களுக்கு அதிகமாக கருப்ப்பபைப் புற்று நோய் ஏற்படும் சாத்தியங்கள் உண்டு.

**பொதுவான அறிகுறிகள் யாவை?**

- வயிறு அடைசாலக இருக்கும் ( உணவு அல்லது ஓரிரு சிற்றுண்டிகளை உண்ட பின் வயிறு நிரம்பியுது போல் இருத்தல்)
- வயிற்று அல்லது அடிவற்று எலும்பு நோ.
- வயிற்று, பிரட்டல்வாந்தி, நெஞ்செரிவு, ஏப்பம்
- வாய்வு, வயிற்றூதல் அல்லது வீக்கம்
- சேமியாக் குணம்
- அடிக்கடி சிறுநீா் கழித்தல்.
- மலச்சிக்கல்.
- உணவுக் கட்டுப்பாடு இல்லாமலே நிறை குறைதல் அல்லது நிறை கூடுதல்.
- சிறுநீா்ப்பை அல்லது முதுகு நோ அசௌகரியம் ஆகியவை
- ஏனையவை...

இந்த அறிகுறிகள் யாவும் சாதரணமானவயாக இருக்கக் கூடிய காரணத்தால் அனேக பெண்கள் தமக்கு கருப்பப் பைப் புற்று நோய் இருப்பதை உணா்வதில்லை. இருப்பினும் இவ் அறிகுறிகள் தொடா்ந்து 3 வாரங்களிற்கு மேல் இருப்பின் நீங்கள் உடனடியாக **ஒரு வைத்தியரைக் காணுதல் வேண்டும்.**

# SANTÉ-VOUS CHEZ-VOUS !

**இப் பிரசுரத்தில் கா்ப்பக் குழாய், கருப்பப் பை ஆகியவற்றில் ஏற்படும் புற்று நோய் பற்றிய விபரங்கள் அடங்கி உள்ளன.**
(2010 version)



ACCÉSSS

*இப் பிரசுரம் **கனடாவின் பொது சுகாதார முகவா்களினதும் Pfizer** நிறுவனத்தினரின் நிதி உதவியுடனும் வெளியிடப்படுகின்றது.